| | |
|---|---|
| மையம் : ______________ <br><br> மேற்பார்வையாளர் <br> கையொப்பம்: ______________ | பெயர்: ______________ <br> பதிவு எண்: ______________ <br> நாள் : ______________ |

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## சான்றிதழ்க் கல்வி

## **BA00** மேல்நிலை

### எழுத்துத் தேர்வு - மே, சூன் - 2016

நேரம் : 1.30 மணி | மதிப்பெண் : 50

Time : 1.30 hrs. | Total Marks : 50

### பகுதி - 1

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following text and answer the questions given below in a single line.

**(5x1=5)**

தமிழ்மொழி கவிதை வளம் நிறைந்த மொழியாகும். தமிழ்மொழியில் இரண்டு ஆயிரம் ஆண்டுகளாகக் கவிதைகள் எழுதப்பெற்று வருகின்றன. இந்தக் கவிதைகளில் காதல், வீரம், தத்துவம், பக்தி முதலியன குறித்துச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இக்கவிதைகள் மூலமாக, பண்டை தமிழரின் வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் தெரிந்து கொள்ள முடிகின்றது.

இக்கவிதைகளின் தொடர்ச்சியாக இக்காலத்திலும் கவிதைகள் எழுதப்பெற்று வருகின்றன. இக்காலத்தில் எழுதப்பெறும் கவிதைகள் - இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் என அழைக்கப்பெறுகின்றன. இக்கால கவிதைகள் பழைய கவிதைகளிலிருந்து பொருள், வடிவம் ஆகியவற்றால் பெரிதும் வேறுபட்டவை. இவற்றுள் இருபதாம் நூற்றாண்டின் முன் பகுதியில் தோன்றிய கவிதைகள் தனி வகைப்பட்டன. மறுமலர்ச்சிக் கவிதைகள் பழைய வடிவத்தை ஏற்றுக் கொண்டன.

**வினாக்கள் :**

1. தமிழ்மொழி எவ்வளம் நிறைந்த மொழியாகும்?

___

2. இந்தக் கவிதைகளில் எவற்றை குறித்தச் செய்திகள் இடம்பெற்றுள்ளன?

___

3. இக்கவிதைகள் மூலமாக எவற்றை தெரிந்து கொள்ள முடிகின்றது?

___

4. இக்காலத்தில் எழுதப்பெறும் கவிதைகள் எந்த நூற்றாண்டு கவிதைகள் என அழைக்கப்பெறுகின்றன?

___

5. இக்கால கவிதைகள் பழைய கவிதைகளிலிருந்து எவ்வெவற்றால் வேறுபட்டவை?

___

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

ஞானத்தில் முன்னேறுவோம்! - விஞ்
ஞானத்தில் முன்னேறுவோம்!
வானத்தில் பறந்து வையத்தையே அளந்து
ஞானத்தில் முன்னேறுவோம்! - விஞ்
ஞானத்தில் முன்னேறுவோம்!

மண்ணுக்குள்ளே இருந்து
எண்ணெய் எடுப்போம்! தினம்
வகைவகைச் சோதனையில்
நெல்லைக் குவிப்போம்!

விண்ணைப் பிளந்து சென்று
நோட்டமிடுவோம்! - நாம்
விரைவாக நல்வாழ்வுத்
தோட்ட மிடுவோம்!

வினாக்கள்

1. எதில் முன்னேறுவோம்?

_______________________________________________

_______________________________________________

2. மண்ணுக்குள் இருந்து என்ன எடுப்போம்?

_______________________________________________

_______________________________________________

3. வகைவகைச் சோதனையில் என்ன குவிப்போம்?

_______________________________________________

_______________________________________________

4. விண்ணை பிளந்து சென்று என்ன செய்வோம்?

_______________________________________________

_______________________________________________

5. விரைவாக நாம் எதை தோட்டமிடுவோம்?

_______________________________________________

_______________________________________________

**III.** **பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**
Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. பாடல்

______________________________

______________________________

2. செய்தி

______________________________

______________________________

3. நாடு

______________________________

______________________________

4. வயல்

______________________________

______________________________

5. பழம்

______________________________

______________________________

IV. **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**
Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. பாரதியார் தமிழ்மொழியை எவ்வாறு போற்றியுள்ளார்?
2. வருணனை என்றால் என்ன?
3. மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. செய்தி - விளக்குக.
5. அதிக வட்டிக்கு ஆசைப்பட்டால் என்ன நடக்கும்?
6. புத்தரின் அறவுரையை கூறுக.
7. முயற்சி குறித்து வள்ளுவர் கூறும் கருத்து யாது?
8. அதியமான் கூறியதைக் கேட்ட ஔவையாரின் பதில் யாது?
9. வசந்த சவுந்தரி (வல்லி) எவ்வாறு பந்தாடினாள்?
10. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**V** **பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**
Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற நண்பனை பாராட்டி கடிதம் வரைக.
2. நீ விரும்பும் விளையாட்டைப் பற்றி கட்டுரை வரைக.
3. அண்மையில் நீ படித்த புத்தகத்திலிருந்து அறிந்த செய்திகளைக் கட்டுரையாக எழுதுக.

*****